**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 194/2010**

**PROSECUTION WITNESS NO. 8**

| | | |
|---|---|---|
| **Name** : டாக்டர். மோகன்தாஸ் | | |
| **Father's/Husband Name :** நாராயணசாமி | **Occupation** : மருத்துவர் |
| **Address** : சீனிவாசபுரம், தஞ்சாவூர். | **Age** : **75/2025** |

**(Accused 1 Died. Accused 2 to 4 absent. Petition U/s. 355 BNSS filed and allowed.)**

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திரு, சு, நித்தியகுணாளன், பெஞ்ச் கிளார்க் கிரேடு 3, திருமதி. ர.நித்யா, தட்டச்சர்**

**C.C.No. 194/2010 27.01.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 01.05**

**முதல் விசாரணை:**

1, நான் தற்போது தஞ்சாவூர் ரோகிணி மருத்துவமனையில் சிறுநீரக பிரிவில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் இந்திய மருத்துவ கழகத்தில் தஞ்சை மாவட்ட தலைவராக 1995–1997 வரை இருந்தேன். எங்கள் மருத்துவ கழகத்தில் போலி மருத்துவர் ஒழிப்பு அமைப்பு இருந்தது. தஞ்சையில் 1ம் எதிரி துளசிதாசன் M.D என்ற பட்டமும், Ph.d பட்டமும் வழங்குவதற்காக பதிவு சீட்டு கொடுத்து கொண்டிருந்தார். அதில் எங்களுடைய மருத்துவர்கள் சிலரும் சேருவதற்காக இருந்த காலகட்டத்தில் நாங்கள் இந்த தகவலை IMA அமைப்பிற்கு தெரிவித்தோம். 1ம் எதிரி கருத்தரங்கம் ஒன்று நடத்தி தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரியில் பட்டம் வழங்குவதற்காக நோட்டீஸ் அனுப்பியிருந்தார்.

2. நாங்கள் எம்.ஜி. ஆர் யுனிவர்சிட்டிக்கும், இந்திய மருத்துவ கழகத்திற்கும் கருத்தரங்கம் நடத்த அனுமதி வழங்ககூடாது என தெரிவித்திருந்தோம். இந்திய மருத்துவ கழகத்திலிருந்தும், எம்.ஜி. ஆர் யுனிவர்சிட்டியிலிருந்து தஞ்சை மருத்துவக்கல்லூரி முதல்வராக இருந்த Dr. தியாகராஜனுக்கு கடிதம் அனுப்பியிருத்தார்கள். எம்.ஜி. ஆர் யுனிவர்சிட்டியில் ஒப்புதல் வழங்காததால் அந்த கருத்தரங்கத்தை தஞ்சை தமிழ்பல்கலை கழகத்தில் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். நாங்கள் தமிழ்பல்கலை கழக துணை வேந்தருக்கு கருத்தரங்கம் நடத்த அனுமதி வழங்ககூடாது என கடிதம் அனுப்பினோம். பின்னர் தலைமை கழகத்திலிருந்து WHO விற்கு கடிதம் அனுப்பி இது அனுமதியற்ற பட்டம் வழங்கப்பட்டிருப்பதாக கூறியிருந்தார்கள்.

3. ஸ்ரீலங்காவிற்கும், எங்களது IMA அமைப்பிலிருந்து போலியான பட்டப்படிப்பு என கடிதம் அனுப்பப்பட்டது. அதனால் மேற்கொண்டு பட்டம் வழங்குவதை நிறுத்தியிருந்தார்கள். மேலும் 1ம் எதிரியின் கல்லூரியிலிருந்து M.D

பட்டங்கள் மருத்துவர்களிடமிருந்து நீக்கப்பட்டது. தஞ்சை மருத்துவக்கல்லூரி முதல்வர் தியாகராஜன் பெற்றிருந்த Ph.d பட்டத்தை நீக்கவேண்டும் என எம்.ஜி. ஆர் பல்கலைகழகத்திற்கு கடிதம் அனுப்பியிருந்தோம். **அரசு தரப்பு வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு. சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

(ஒப்பம்/-திருமதி.எஸ்.சுசிலா),
நீதித்துறை நடுவர் எண்-I,
தஞ்சாவூர்.